ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2261/6 - 2022 ජනවාරි මස 03 වැනි සඳුදා - 2022.01.03

*2261/6 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 03 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**கிழக்கு மாகாண மாகாண சபை**

*1989 ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய (255 ஆம் அத்தியாயமான) நகர சபை கட்டளைச் சட்டத்தின் 247 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*கிழக்கு மாகாணத்தின் ஆளுநராகிய அனுராதா யகம்பத் ஆகிய நான், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான) ஏற்பாடுகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய (255 ஆம் அத்தியாயமான) நகர சபை கட்டளைச் சட்டத்தின் 247 ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் மூலம் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளையை இத்தால் அறிவிக்கின்றேன்.*

அனுராதா யகம்பத்,
ஆளுநர்,
கிழக்கு மாகாணம்.

ஆளுநர் செயலகம்,
உவர் மலை,
திருகோணமலை,
*2022.01.01.*

**கட்டளை**

*கிழக்கு மாகாணத்திற்குட்பட்ட திருகோணமலை மாவட்டத்திலுள்ள கிண்ணியா நகர சபையின் தவிசாளர் அவர்களினால் 2022 ஆம் ஆண்டிற்காக சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட ஆவணங்கள் (255 ஆம் அத்தியாயமான) நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 178 மற்றும் 178 அ ஆம் பிரிவுகளின் படி சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படாமல் இருக்கின்றமையினால், 2012 ஆம் ஆண்டின் 21 ஆம்*

இலக்க, உள்ளூராட்சி அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 12 ஆம் பிரிவின் படி செயற்படாமை காரணமாகவும் 2021. 12.29 ஆந் திகதி முதல் தவிசாளர் பதவியிலிருந்து விலகியதாகவும், அத்தினம் முதல் அமுலுக்கு வரும் வகையில் குறித்த சபையின் தவிசாளர் பதவி வெற்றிடமாக இருப்பதாகவும் கருதப்படும்.

EOG 01-0005/1

---

### கிழக்கு மாகாண மாகாண சபை

(255 ஆம் அத்தியாயமான) நகர சபைக் கட்டளைச் சட்டம்

(255 ஆம் அத்தியாயமான) நகர சபைக் கட்டளைச் பிரிவு 193 (2) இன் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவத்தின் கீழ் கிழக்கு மாகாண ஆளுநராகிய அனுராதா யகம்பத் ஆகிய நான், சொத்துக்கள், நிதி நிர்வாகம் அதனுடன் தொடர்புற்ற இடைநேர்விளைவான விடயங்கள் தொடர்பான இச்சட்டத்தை அதில் விபரிக்கப்படுகின்ற காலப்பகுதி வரை கீழே குறிப்பிடப்பட்டுள்ள விதியை நடைமுறைப்படுத்த இத்தால் பகிரங்கப்படுத்துகின்றேன்.

அனுராதா யகம்பத்,
ஆளுநர்,
கிழக்கு மாகாணம்.

ஆளுநர் செயலகம்,
உவர் மலை,
திருகோணமலை.
2022.01.01.

### விதி

கிழக்கு மாகாணத்திற்குட்பட்ட திருகோணமலை மாவட்ட எல்லைக்குள் அமைந்துள்ள கிண்ணியா நகர சபையின் 2022 ஆம் ஆண்டிற்குரிய வரவு செலவுத் திட்டத்தை (255 ஆம் அத்தியாயமான) நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 178 மற்றும் 178அ ஆம் பிரிவுகள் ஆகியவற்றின் தேவைப்பாடுகளுக்கு அமைவாக நிறைவேற்றத் தவறியுள்ளமையால் கிண்ணியா நகர சபையின் தவிசாளருக்கான பதவி, 2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உள்ளூராட்சி அதிகார சபைகளின் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 12 இற்கு அமைய 2021.12.29 முதல் வெற்றிடங்களாகியுள்ளது. இதன்படி 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூராட்சி அதிகார சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்திற்கு அமைய கிண்ணியா நகர சபையின் 2022 ஆம் ஆண்டிற்கான புதிய வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்காக வெற்றிடமாகியுள்ள தவிசாளர் பதவிக்குரிய நியமனத்தை மேற்கொள்ள முடியும். எனவே நான், திருகோணமலை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளரை 2021 ஆம் ஆண்டில் எஞ்சியுள்ள மிகுதிக் காலத்திற்கான மற்றும் மேற்கூறிய வரைபு வரவு செலவுத் திட்டத்தின் படி 2022 ஆம் ஆண்டிற்கான பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள செலவினங்களை 2021.12.29 ஆந் திகதி முதல் கிண்ணியா நகர சபைக்கு புதிய தவிசாளர் பதவிக்கான நியமனம் மேற்கொள்ளப்படுகின்ற காலப்பகுதி வரை செயற்படுத்த அங்கீகாரத்தினை வழங்குகின்றேன்.

முன்மொழிவுகள்:

1. சம்பளங்களும் கொடுப்பனவுகளும்
2. பயணப்படிகள்
3. காகிதாதிகள்
4. நடைமுறைச் செலவுகள்
5. LDSP, CDLG செயற்றிட்டம் தொடர்பான செலவுகள்
6. மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை/பிரமாண அடிப்படையிலான கொடை

EOG 01-0005/2

## கிழக்கு மாகாண மாகாண சபை

*1989 ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 223 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*கிழக்கு மாகாணத்தின் ஆளுநராகிய அனுராதா யகம்பத் ஆகிய நான் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 223 ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் மூலம் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளையை இத்தால் அறிவிக்கின்றேன்.*

அனுராதா யகம்பத்,
ஆளுநர்,
கிழக்கு மாகாணம்.

ஆளுநர் செயலகம்,
உவர் மலை,
திருகோணமலை,
*2022.01.01.*

**கட்டளை**

*கிழக்கு மாகாணத்திற்குட்பட்ட திருகோணமலை மாவட்டத்திலுள்ள கிண்ணியா பிரதேச சபை மற்றும் அம்பாறை மாவட்டத்திலுள்ள லாகுகல பிரதேச சபை ஆகியவற்றின் தவிசாளர்களினால் 2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட ஆவணங்கள் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் 168 மற்றும் 169 ஆம் பிரிவுகளின்படி சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படாமல் இருக்கின்றமையினாலும். 2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 17 ஆம் பிரிவின்படி செயற்படாமை காரணமாகவும், 2022.01.01 ஆந் திகதி முதல் மேற்படி சபைகளின் தவிசாளர்கள் பதவியிலிருந்து விலகியதாகவும் அத்தினம் முதல் அமுலுக்கு வரும் வகையில் குறித்த சபைகளின் தவிசாளர்கள் பதவி வெற்றிடமாக இருப்பதாகவும் கருதப்படும்.*

EOG *01-0005/3*

---

## கிழக்கு மாகாண மாகாண சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டம்*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 171(ஆ) இன் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவத்தின் கீழ் கிழக்கு மாகாண ஆளுநராகிய அனுராதா யகம்பத் ஆகிய நான், சொத்துக்கள், நிதி நிர்வாகம் அதனுடன் தொடர்புற்ற இடைநேர்விளைவான விடயங்கள் தொடர்பான இச்சட்டத்தை, அதில் விபரிக்கப்படுகின்ற காலப்பகுதி வரை கீழே குறிப்பிடப்பட்டுள்ள விதியை நடைமுறைப்படுத்த இத்தால் பகிரங்கப்படுத்துகின்றேன்.*

அனுராதா யகம்பத்,
ஆளுநர்,
கிழக்கு மாகாணம்.

ஆளுநர் செயலகம்,
உவர் மலை,
திருகோணமலை,
*2022.01.01.*

**விதி**

*கிழக்கு மாகாணத்திற்குட்பட்ட திருகோணமலை மாவட்ட எல்லைக்குள் அமைந்துள்ள கிண்ணியா பிரதேச சபை மற்றும் அம்பாறை மாவட்ட எல்லைக்குள் அமைந்துள்ள லாகுகல பிரதேச சபை ஆகியவற்றில் 2022 ஆம் ஆண்டிற்குரிய வரவு செலவுத் திட்டத்தை 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவுகள் 168 மற்றும் 169 ஆகியவற்றின் தேவைப்பாடுகளுக்கு அமைவாக நிறைவேற்றத் தவறியுள்ளமையால் கிண்ணியா மற்றும் லாகுகல பிரதேச சபைகளின் தவிசாளருக்கான பதவி 2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உள்ளூராட்சி அதிகார சபைகளின் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 17 இற்கு அமைய வெற்றிடங்களாகியுள்ளது. இதன்படி 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூராட்சி அதிகார சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்திற்கு அமைய கிண்ணியா மற்றும் லாகுகல பிரதேச சபைகளின் 2022 ஆம் ஆண்டிற்கான புதிய வரவு செவுத்திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்காக வெற்றிடமாகியுள்ள தவிசாளர் பதவிக்குரிய நியமனத்தை மேற்கொள்ள முடியும். எனவே, நான் கிண்ணியா பிரதேச சபைக்கு திருகோணமலை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மற்றும் லாகுகல பிரதேச சபைக்கு அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அவர்களுக்கும் மேற்கூறிய வரைபு வரவு செலவுத் திட்டத்தின் படியான பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள முன்மொழிவுகளை 2022.01.01 ஆந் திகதி முதல் வெற்றிடமாகிய கிண்ணியா மற்றும் லாகுகல பிரதேச சபைகளின் தவிசாளர் பதவிக்கான நியமனம் மேற்கொள்ளப்படுகின்ற காலப்பகுதி வரை செயற்படுத்த அங்கீகாரத்தினை வழங்குகின்றேன்.*

முன்மொழிவுகள்:

1. சம்பளங்களும் கொடுப்பனவுகளும்
2. பயணப்படிகள்
3. காகிதாதிகள்
4. நடைமுறைச் செலவுகள்
5. LDSP, CDLG செயற்றிட்டம் தொடர்பான செலவுகள்
6. மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை/பிரமாண அடிப்படையிலான கொடை

EOG 01-0005/4